


எனது வாழ்க்கையே எனது செய்தி

– மகாத்மா காந்தி

# காந்தீயம்

இருதிங்கள் இதழ்

மலர் - 22 இதழ் - 01 2005, ஒக்டோபர் - 2 விலை: ரூ 10/=


## காந்தி இன்றிருந்தால்

நீண்டகாலம் வாழ்வேன் என்று கூறிய காந்தியடிகள் இன்றிருந்தால் அவருக்கு 138 வயதாயிருக்கும். அவர் தனது வாழ்வில் ஆபிரிக்கா, ஆசியா, ஐரோப்பா ஆகிய பெரிய கண்டங்களில் புகழ் மனக்க வாழ்ந்தவர். மிகத் தூரத்திலே உள்ள அவுஸ்ரேலியாவிலும் அவருக்கு அன்பர்கள் பக்தர்கள் இருந் தார்கள். காந்தீயைப்போல் அண்மைக்காலத்தில் அதிமனிதனாயும் உலக மனிதனாயும் வையத்து வாழ்வாங்கு வாழ்ந்தவர் எவருமில்லை. இந்துக்கள் கிறீஸ்தவர்கள் முஸ்லீங்கள் என்னும் மதங்களின் தலைவர்களே காந்தியடிகளில் வாழ்க்கையில் தங்கள் தங்கள் மதக்கோட்பாடுகள் நிரம்பி நிற்க கண்டு தலைவணங்கினார்கள். காந்தியடிகள் நினைத்தால் இந்தியாவில் மிகப்பெரிய பதவியை வகித்திருக்கலாம். ஆனால் அவர் ஏழைகளிலும் ஏழையாய் இனிய வாழ்வு வாழ்ந்தார். எல்லோரும் இன்புற்று இருக்கும் வழியை விரும்பினார். உணவில் உடையில் உறைவிடத்தில் அவரைப்போல ஏழ்மையை கடைப்பித்த உலக மேதை எவரும் இல்லை அதிகாரத்தில் இருந்த ஆங்கிலேயரை அன்பாளும் இனிய மொழியாலும் இனங்கச் செய்வதோடு அவர்களைப் பணியவும் செய்தவர். அவரின் பொக்கை வாயில் இருந்து வெளிந்த சொற்கள் வேதவாக்காய் இருந்தன. நியாயவாதிப்படிப்பில் நிபணராய் இருந்த காந்தீயடிகள் உலக ஞானத்தை உணர்ந்து நீதியைக் காண சிறையிலே தவம் செய்தார். தாம் கண்ட நீதி வழியில் தாம் வாழ்ந்ததோடு உலகத்தவரையும் வாழச்செய்ய முயன்ற ஒப்பற்ற தலைவர் ஆவார்.

# அமெரிக்காவின் அநீதியும் சத்தியாக்கிரப்போராட்டமும்

- வெ.ஜீவாநந்தம்

*நம் அரசாங்கம் போர் வழியை நீக்கிச் சமாதான வழியை ஏற்றுக்கொள்ளாது, தனிமனித, கட்சி நோக்கில் அரசியல் நடத்துவதை வெறுக்கும் நல்லோர் பெரும்பாலாராய் இருப்பினும் அவர்கள் துணிவின்றி அதிகாரத்தில் உள்ளவர்களை எதிர்த்து வெள்ளைவானில் கடத்தப்பட்டு அழியவிரும் பாது வாளா இருக்கிறார்கள். முதலாளித்துவ பிரசாரத்தால் மூளைகழுவப்பட்டுள்ள அமெரிக்கரில் சிலரேனும் போர் இல்லாத அமைதி உலகம் காணும் ஆசையை செயற்படுத்துகின்றனர். காந்தீய வழி தழைத்தோங்குகிறது. நம்மவரோ காந்தி அஞ்சலியை வானாலியில் கால்மணி நேரம் செய்வதுடன் திருப்தியடைகின்றனர். எல்லோரும் வாழ்க என்ற எண்ணம் பெருகுக.*

உலகின் ஒரே வல்லரசு செல்வம் கொழிக்கும் சொர்க்கபுரி. நம் படித்த இளைஞரின் கனவுல கம், அனைத்து கிரகங்களையும் தொடும் அறிவியல் வன்மை, எதையும் சாதிக்கும் பேராற்றல் கொண்ட எஜமானன் அமெரிக்கா.

இத்தனை பெருமைகளை யும் பொய்யாக்கி, இத்தனை ஜொலிப்பின் பின் மறைந்துகிடக் கும் கோரமுகத்தை வெளிக்காட் டிக் கொண்டுள்ளன சமீபகால நிகழ்வுகள். நெருங்கமுடியாத உருக்குக் கோட்டை பென்ரகனை யும் உலக வர்த்தகமையத்தை யும் ஒரே நாளில் தகர்த்தெறிந்த ஒசாமா பின்லேடன் மூன்றாண்டு களாகியும் தொடர்ந்து தன் வலையை விரித்துச் செல்கிறான்.

பேரழிவு ஆயுதங்கள் குவிக் கப்பட்டுள்ளன. அணுக் குண்டுக் கிடங்குகள் மணலடிக்குள் உள் ளன என்று காரணம் காட்டி அமெ ரிக்கா தனது இரண்டாவது சிலு வைப் போரை அரபு மண்ணில் தொடங்கியது. நாயைக் கொல்வ தனாலும் அது விசர்நாய் என்று சொல்லியே கொல்லும் நீதிமான் கள் அமெரிக்கா. பிடிபட்ட சதா மின் சிக்குத் தலைக்குள் அணுப்பேனைத் தேடுகின்றது. சி.ஐ.ஏ. எண்ணெய்க் கிணறுகளை

(4ஆம் பக்கம்பார்க்க)

**கடமையைச் சரிவரச் செய்யுங்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாலய அதிபர் கனகசபை செல்வக்குமாரன் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் காந்தீய சிந்தனை கற்கைநெறியில் முதுமாணிப் பட்டத்தைப் பெற்றுள்ளார். காந்தீயம் இதழுக்காக சில வினாக்களோடு அவரை அணுகினோம்.**

**☆ உங்களுடைய தந்தையார் மூத்த காந்தீயவாதிகளில் ஒருவராக அறியப்படுகிறார். உங்களுடைய குடும்பப் பின்னணி பற்றிக் கூறுங்கள்?**

1903 இல் பிறந்த என்னுடைய தந்தையார் பொன்னம்பலம் கனகசபை - காந்திஜி, மல்லாகம் மகாவித்தியாலத்திற்கு வருகை தந்தபொழுது, ஹண்டி பேரின்பநாயகம் இந்து சாதனம் ஆசிரியர் சட்டத்தரணி ஆர்.என் சிவப்பிரகாசம் ஆகியோருடன் இணைந்து வரவேற்புக் கூட்டமொன்றை ஏற்பாடு செய்தார்கள். காந்தி அடிகள் கதர் உடை அணியும் படி தந்தையாரைக் கேட்டுக் கொண்டார்கள். அதனால் வெளிநாட்டு உடைப் பகிஷ்கரிப்பு சைவபோசனம் என்பவற்றில் உறுதியாக இருந்தார். மல்லாகம் மகாவித்தியாலயத்தில் ஆங்கில ஆசிரியராக இருந்த அவர் சாதாரண 'வேட்டி, நஷனல்' அணிவார். காந்தீயம் பற்றி சஞ்சிகைகளில் கட்டுரைகள் கவிதைகள் எழுதினார். அப்போது தென் பகுதி தலைவர்களின் தொடர்புகளும் இருந்துள்ளன.

1933ல் யாழ்ப்பாணம் வாலிபர் சங்கத்தின் உள்ளூர்க்கிளையின் செயலாளராயிருந்தார். சங்கத்தின் இரண்டாவது மகாநாடு தெல்லிப்பழையில் நடந்தது. ஹன்டிபேரின்ப நாயகம் ஈவியன்பெரேரா ஜி.சீ.என்.கொரியா எஸ்.டபிள்யூ. ஆர்.டீ.பண்டாரநாயக்க போன்ற தேசியவாதிகள் அதில் கலந்து கொண்டனர். சட்டசபைப் பகிஷ்கரிப்பு உச்சக்கட்டத்தில் இருந்த காலம் அது.

**☆ தாங்கள் இளமைப்பருவம் பற்றிக் கூறுவீர்களா?**

1949இல் சுன்னாகத்தில் பிறந்து மயிலணி சைவ வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வியைப் பயின்று மல்லாகம் இந்துக்கல்லூரி, ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆகியவற்றில் உயர் கல்வியைப் பெற்றேன். சிறுவயதிலேயே விவசாயம் கால்நடை வளர்ப்புத்துறைகளில் நாட்டம் இருந்தது. பலாலி ஆசிரியர் கலாசாலையில் அத் துறையில் (1075-76) பயிற்சியைப் பெற்றேன். தொடர்ந்து களுத்துறை முஸ்லிம் மகா வித்தியாலயம், மனிப்பாய் இந்துக்கல்லூரியில் ஆரம்பித்து இராமநாதன் கல்லூரி ஆகியவற்றில் விவசாய ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளேன். பல்வேறு கற்கைநெறிகளில் சேர்ந்து அறிவை வளர்த்தேன்.

மனதிற்கு அமைதியையும் உற்சாகத்தையும் தரும் அறிவாகவும் காந்தீய சிந்தனைகள் விளங்குகின்ற காரணத்தினால் அதை மேற்படிப்புக்காகத் தேர்ந்தெடுத்தேன். இளம் பராயத்தில் தந்தையார் மூலம் அறிந்த செய்திகளும் இதற்கு ஒரு தூண்டுதலாய் அமைந்தன.

**☆ காந்தீய கொள்கைகளை இன்றைய நவீன தகவல் தொழினுட்ப யுகத்தில் முன்னெடுத்தல் பற்றி என்ன கூறவிரும்புகிறீர்கள்?**

இன்று அரசின் பொருளாதாரக் கொள்கைகள் வெளிநாட்டு இறக்குமதியை நாடி நிற்கின்றன.

உலக மயமாக்கல் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இன்றைய காலத்தில் காந்தீயச் சிந்தனைகளைச் சவாலாக எடுத்து உழைக்க வேண்டும். சுயதொழில் வாய்ப்பைப் பெருக்குவதால் இலங்கை தன்னிறைவு காணக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. கைத்தொழில் விவசாயத்துறைகளைப் பெருக்கவேண்டும். மாணவப்பருவத்திலேயே தொழில் முறையைப் பழகுகின்ற ஆதாரக்கல்வி, சிக்கனமான வாழ்க்கைமுறை என்பன என்றைக்குமே உதவக்கூடியன. வன்முறை அற்ற அகிம்சைக் கலாசாரம், இயற்கை வைத்தியம் இயற்கையோடு இணைந்த வாழ்க்கை பற்றி வலியுறுத்திய காந்தியடிகள் 1930களில் சூழல் மாசடைதல் பற்றி எச்சரித்துள்ளார்.

**☆ இன்றைய மாணவர் சமூகம் காந்தீய சிந்தனைகளைத் தெரிந்து வைத்துள்ளதா?**

காந்தீய சிந்தனையை அரசு ஓரளவுக்கு ஏற்று நடைமுறைப்படுத்துகின்றது. தேசிய மட்டத்தில் அது ஏற்கப்பட்டு ஆசிரிய பயிற்சிகளிலும் இடம் பெறுகிறது. 5 ஆம் ஆண்டு தமிழ்ப் பாடப்புத்தகத்தில் காந்தியைப்பற்றிய பாடம் உண்டு. எனவே காந்தீயத்தை வளர்க்கின்ற வாய்ப்புக்கள் இருக்கின்றன. கலாநிதி ஏ.ரி.ஆரியரத்தினா அவர்களும் இலங்கை முழுவதும் சர்வோதய அமைப்பை ஏற்படுத்தி அதனூடாக காந்தீயத்தை வளர்க்க முயற்சிக்கிறார்.

**☆ காந்தீயக் கற்கையை எமது பல்கலைக்கழகங்களில் பட்டப் படிப்புக்கான நெறியாக்குவது குறித்து.....?**

இங்குள்ளவர்கள் காந்தீய கற்கையை வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களை நாடிப் பயின்று கொண்டிருக்கும் இன்றைய நிலையில் இங்கும் அதற்கான சந்தர்ப்பம் கிடைக்குமாயின் பலர் பயனடையக்கூடிய சூழல் உருவாகும். அமைதியான வாழ்வுக்கு மகாத்மாகாந்தியின் வாழ்வும் வழிகாட்டலும் என்றும் துணை புரிவன.

**☆ தங்கள் காந்தீயகற்கை நெறியின் உள்ளடக்கம் பற்றி......**

அது மிகவும் பயனுள்ள கற்கை நெறி. வாழ்வின் தொலைந்து போன உயர் விழுமியங்களை மீளக்கண்டு கொள்ளவும் அதன்படி ஒழுகவும்கூடிய மனப்பக்குவத்தை தருவதாகும். சமூகத்தின் இசைவாக்கத்துடன் கூடிய நற்பிரஜையாக வாழ்வதற்குரிய படிப்பினையையும் தருவதாக உள்ளது. அறத்தின் வழிபிறழாது பொருளைத் தேடவும் அவ்வழியிலேயே செலவு செய்யவும் சேமிக்கவும் கூடிய மனப்பக்குவத்தினைத் தருகிறது. உழைப்பினால் பெற்ற ஊதியத்தினால் வாழ்வின் அவசிய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும் வழிகாட்டுகின்ற சிறந்த கற்கை நெறியாகவும் மனஉறுதிப் பாட்டைத் தருகின்ற நெறியாகவும் அது அமைந்துள்ளது.

**நேர் கண்டவர் :**
**- எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எனது வாழ்க்கையே எனது செய்தி

# காந்தீயம்

காந்தி ஆண்டு 138 (2005 ஒக்டோபர் 02)

## திரும்பிப் பார்க்கிறோம்

காந்தீயம் இதழின் 20 வது மலரின் முதல் இதழை தங்கள் முன்வைப்பதில் மகிழ்வடைகின்றோம்.அகில இலங்கை காந்திசேவா சங்கம் 2004 இல் மீளப்புனரமைக் கப்பெற்றபின் 2004 ஒக்டோபர் 30 இல் காந்தீயத்தின் இதழ் 19 மலர் இதழ் ஒன்றை வெளியிட்டது. தொடர்ந்து இரு மாதங்களுக்கு ஒன்றாக நான்கிதழ்கள் வெளிவந்தன. இவ்விதழ்கள் வெளிவருவதற்கு ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள் ளும் இவ்வேளையில் முன்னைய நாள்களையும் சிறிது திரும்பிப்பார்க்கின்றோம்.

1949 முதல் தளர்நடையிட்டும், உந்நதமாக ஓங்கி உயர்ந்தும் தன் பணியைப் 19 ஆண்டுகள் இயன்றவரை செய்த காந்தீயம் 1985க்குப்பின் உறக்கநிலையில் விடப்பட்டது. 2004 ஆகஸ்டு 22ல் அகில இலங்கைக் காந்தி சேவா சங்கம் மீளமைப்புச் செய்யப்பட்ட பின்னர் ஐப்பசி 2இல் மலர் 20, இதழ் வெளிவந்தது.

சங்கம் புனரமைப்புக்கு முன்னரே தலைவர் சோ.க.தம்பிப்பிள்ளையின் குடும்ப அறக்கட்டளையின் உதவியுடன் 19 பட்டதாரிகளைத்தேர்ந்து எடுத்து காந்தீய அடிப்படையில் சமூக சேவைப் பயிற்சி அளிக்கும் முயற்சி தொடங்கியது. அரசாங்க உத்தியோகம் என்ற மாயவலை யில் மோகம் கொண்ட பிள்ளைகள் பயிற்சியைக் கைவிட்ட னர். காந்திய ஆய்வில் உயர்பட்டங்கள் பெறுவோர் ஓரிருவர் தொடர்ந்து நாட்டம் கொண்டுள்ளனர்.

உயர்வகுப்பில் கற்றும் பல்கலைக்கழகம் புகவாய்ப் பில்லாத மாணவர்களைக் **காந்தீய ஆய்வு - சமாதான விஞ்ஞானம்** என்ற துறையில் பயிற்றும் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இத்துறையில் சிறப்புற்ற இந்திய பல்கலைக்கழகங்களுடன் தொடர்புகொண்டு பொருத்த மான திட்டங்களை இங்கு வகுக்கும் ஆவல் விரைவில் கைகூடும் என நம்புகின்றோம்.

வெளிநாட்டுப் பேராசியர் ஒருவர் எம் முயற்சிகளைப் பற்றி அறிந்தபோது மேனாடுகளில் காந்தீயமும் சமாதான விஞ்ஞானமும் வளருகின்ற அளவுக்கு இன்றைய வட இலங்கையில் அது இளம் உள்ளங்களுக்கு ஊக்கம் வருமா என்று பயப்படுகிறேன் என்றார். அந்தோ, எம் இன்றைய நிலை இப்படி ஆயிற்றே என்று கண்ணீர் விடுவதில் பயனில்லை. காந்தீய சிந்தனையில் இருக்கிற சிலராவது சிலரையேனும் இவ்வழியில் சிந்திக்கவைத்தால், பெரியகாரியம்.

காலம் வரும், காத்திருப்போம். காந்திய சிந்தனை விளக்கு புயல்களால் அணைந்து விடாது காக்க முயல்வோம். நம்பிக்கை ஒளி மின்மினி அளவு என்றாலும் கண்ணுக்குத்தெரிகிறது. ஓரிரு விசுவாசமிக்க இளைஞர்கள் காந்தி ஒரு மகான், அவர் வழி எமக்கு மீட்சிதரும் என நம்புகின்றார்கள். ஒரு சுடர் ஆயிரம் சுடர் கொழுத்த உதவும்.

**புனிதன் காந்தி வந்ததும்**
**பொய்த்துப் போக ஒன்னுமோ**
**புவனி ஓங்கிவாழுமே!**


# வெளிவந்து விட்டது...
# நீங்கள்
# படித்துவிட்டீர்களா...?




**அகில இலங்கை காந்திசேவா சங்கத் தின் சிறந்த வெளியீடாக சத்திய விஞ்ஞானம் வெளிவந்துள்ளது.**

**1968-1978 வரையான காலப்பகுதியினுள் காந்தியம் பத்திரிகையில் வெளியான ஆசிரியர் தலையங்கங்களின் தொகுப்பாக வெளிவந்தி ருக்கும் இந்த நூல் காந்தீய நோக்கில் உலக விவகாரங்களை ஆராய்கின்றது.**

**புலவர் பாண்டியனார், இ.இரத்தினம் ஆகிய சிறந்த கல்விமான்கள் தமது நுண்மாண் நுழைபுலம் கொண்டு துரு வித் துருவி ஆராய்ந்து சாறு பிழிந்தெடுத்த கருத்துக்கள் சத்திய விஞ்ஞானம் நூலுருவில் மக்கள் முன்வைக்கப்படுகின்றன.**

**மாணவர்களும் பொதுமக்களும் நூலைப் படித்து பயனடைய வேண்டுகின்றோம். அழகிய அச்சமைப்பில் வெளிவந்திருக்கின்ற இந்த நூல் XXVI+178 பக்கங்கள் கொண்டது. நூலின் விலை 225 ரூபா மட்டுமே.**

**இதே புத்தகம் பள்ளி மாணவர்களுக்கு ரூபா 125.00.**

**தொடர்புகளுக்கு :**

**அகில இலங்கை காந்திசேவா சங்கம்,**
**இல. 171, முதலாம் குறுக்குத் தெரு,**
**யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1ஆம் பக்கத் தொடர்ச்சி....)

களைச் வசப்படுத்தப்போய் எண்ணெய் சக்தியில் சிக்கி, முடிவற்ற சறுக்கலில் தவிர்க்கிறது உலகின் முதலாவது நாடு. புஷ்ஷின் வாட்டர்லூ ஆகிறது பாக்தாத். வாள் எடுத்தவன் வாளால் மடிவான் என்ற பைபிள் வசனத்தை அரபு மண்ணில் புரிந்து கொள்கின்றனர் அமெரிக்கர்கள்.

போர் - ஆளுவோரின் பெருமித விளையாட்டு; மக்களுக்கோ உயிர்வதை. சிண்டி, ஷீகன் போர்க்களத்தில் ஆண் மக்களைப் பலிகொடுத்த அமெரிக்கரில் ஒருவர் - உயிர்த்தியாகம் செய்த வீரரின் உறவினரைச் சந்தித்து கௌரவிக்கும் நாள் வந்தது. அதிபர் புஷ் "இன்றைய கதாநாயகர்கள் யார்?" என்று அலட்சியக் குரலில் கேட்டுக் கொண்டே வெள்ளை மாளிகை வரவேற்பறையில் நுழைத்தார். அவரது கண்களில் சோகம், கவலை, கருணை ஏதுமேயில்லை. மனிதாபிதமான சுவடு அற்ற வெறும் சம்பிரதாயமாகவே அந்த நிகழ்வு நடந்தது.

சிண்டி ஷீகன் தனக்கு நேர்ந்த இழப்பும், சோகமும் இனி ஒரு ஒரு பெண்ணுக்கும் நிகழக் கூடாது என்று முடிவு செய்தார். **"உண்மைபேசும் இராணுவக் குடும்பம்"** என்ற இயக்கத்தில் சேர்ந்தார். அது போருக்கு எதிரான இயக்கம். ஈராக்கில் இனியும் அமெரிக்கப்படை இருப்பது தேவையற்றது. போரை நிறுத்தி அமெரிக்க வீரரை உயிருடன் வீடு திரும்பச்செய்ய வேண்டும் என்று சாத்வீகப் போராட்டத்தைத் தொடங்கியது.

புஷ் தம் பண்ணையில் 5 வார ஓய்வு எடுத்த போது. ஷீகன் போராட்டத்தைத் தொடங்கினார். போர்க்களம் எங்கோ தானே உள்ளது. சிண்டி ஷீகன் அதிபரைச் சந்திக்க இதுவே தருணம் எனத் தீர்மானித்தார். போர் எதிர்ப்பு அமைதிப் போராளி எனப்பெயர் பெற்றுவிட்ட அவரை உள்ளே விடமறுத்தனர். பண்ணை வாசலில் - தன்மகன் பேரால் 'கேசி முகாம்' எனப் பெயரிட்டார். உண்மை பேசும் இராணுவக் குடும்பம் தன் பெண் பிரதிநிதிகளைப் பெரும் அளவில் அனுப்பியது. அமைதிக்கான சத்தியாக்கிரகம் வலிமையுற்றது. மகனை இழந்த பெண்கள் வெள்ளைச் சிலுவையில் இறந்த இளைஞர்களின் பெயர்களை எழுதி ஏந்திய படி போராடினர்.

1849ல் ஷென்றி டேவிட் தோரோ அநியாயமான அரசாங்கத்தின் சட்டங்களை எதிர்த்துத் தனிமனிதன் குரல் எழுப்பினால் நீதியைநாடும் பலரும் அதில் சேர்வர் என்று சிவில் சட்டமறுப்பு போருக்குச் சென்றபோது அதனை எதிர்த்துச் சிறைசென்றார். அதன் தொடர்ச்சியே ஷீகனின் போராட்டம் என்று எழுதினர் சிலர். கறுப்பு இனமக்களின் சமத்துவ உரிமைக்காகப் பேருந்து நிலையத்தில் அமர்ந்து எழ மறுத்துச் சத்தியாக்கிரகம் செய்த ரோசா பேர்கென் நடத்திய அறப்போருக்கு இணையானது என்று பத்திரிகைகள் புகழ்ந்தன. போர் மறுப்புக்கான புதிய காந்தி வழிப்போராளியாக ஷீகன் அடையாளம் காணப்பட்டார். அரச பிரசாரங்களில் ஏமாந்தவர்கள் தனிப்பட்ட ஒரு பெண்ணின் விரக்தி; இடதுசாரிகளின் மறைமுகப் போராட்டம் என்று சாயம் பூசியவர்களின் கூற்று பொய்யாகியது. போரை எதிர்ப்போர் எண்ணிக்கை பேரியக்கமாக வடிவெடுக்கத் தொடங்கியது.

கதரீனா சுறாவளியால் பாதிக்கப்பட்ட கறுப்பரின்துன்பம் துடைப்பதில் பராமுகமாயிருந்த அமெரிக்க ஆட்சியாளரின் செயல் தென்னாபிரிக்காவில் முன்னர் ..... வெள்ளையரின் நிறத்துவேஷத்தை விஞ்சிவிட்டது எனக்குற்றச்சாட்டுகள் பெருகின. அமெரிக்க அதிபர் உபஅதிபர் மட்டுமல்ல அரைக் கறுப்பரான வெளியுறவுச் செயலர் கொண்டாலீசா கூட அக்கறை செலுத்தவில்லை.

170 பில்லியன் டொலர் ஈராக் போருக்கும் 180 பில்லியன் விவசாயமானியத்துக்கும் வாரி இறைக்கும் அமெரிக்க அரசு 10,000 போர் வீரர்களைத் தந்த மாநிலத்தின் அவலத்தைக் கண்டும் சிந்தை இரங்கவில்லை.

மனிதாபிமானம் வறுமைப் பட்டுக்கிடக்கும் அமெரிக்கா மன வளம் பெறப்பிரார்த்திப்போம்.☆

## அன்பர் தபால்

அன்புடையீர்,
வணக்கம்.

இன்றைய காலகட்டத்தில் எவ்வளவோ நவநாகரீகமான ஆடைகள் விலை மதிப்புள்ள பொருட்கள் எல்லோர் வீட்டிலும் உள்ளன். ஒரு காயத்திற்கு அல்லது விளக்குக்குத் திரிபோட ஒரு நூல்துணி கிடையாது. அதற்கு அமைய ஆன்மீகமும் ஆத்மஜோதியும் பழைய நூல்கள்தான். ஆனால் அவற்றிலுள்ள பலாபலன்கள் கணக்கில் அடங்காதது.

உங்கள் சேவைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இப்படிக்கு சிவதொண்டன்,
நா.முருகையா
ஆத்மயோதி தியான
மண்டபம் ஏழாலை கிழக்கு
ஏழாலை.

ஆசிரியருக்கு,

காந்தீயம் கிடைத்தது. நன்றி. 1974ல் கனகராசா நிறுவிய காந்தி சிலைப்படமும் அவர் சேவைகள் பற்றிய குறிப்புகளும் என்னை மகிழ்வித்தன. அவருடன் 27 ஆண்டுகள் சேவையாற்றிய போது அவர் பெரியார் வாக்குகளை அச்சிட்டுப் பிரசாரம் செய்யும் பணியில் பங்குபற்றி அனுபவம் பெற்றேன்.

தருமபுரம் மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க கஸ்தூரிபாய் இல்லத்தில் பெரிய கிணறு அமைத்தார். வள்ளுவர், காந்திமகான்களின் படங்களை எங்கும் விநியோகித்தார். தங்கள் காந்தியப் பணி தொடர இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

இங்ஙனம்,
சின்னையா பொன்னையா
வள்ளிபுனம்,
புதுக்குடியிருப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய்நாடி நோய் முதல் நாடி
வாய் நாடி வாய்ப்பச் செயல்
(வள்ளுவர்)

# தனிமனித, சமூக ஊனங்களை குணப்படுத்துதல்

தனிமனிதன் உடல், உளம் ஆகிய இருதளங்களிலும் நோய் உறுகின்றான். இயற்கை ஒரு நியதியை, ஒழுங்கை, ஒத்திசைவை தன்னுள் உடையதாயிருக்கிறது. வேதம் இதனை ருதம் என்கிறது. தனிமனிதன் அந்த ஒழுங்கை உணர்ந்து, அத்துடன் ஒத்திச் செல்லுவதைவிடும் நிலையில் அவன் உள் ளும், உடலிலும், ஊனுனம், புண் ஏற்படுகிறது. மணிவாசகர் பாண்டிய அரசனின் மந்திரியாயிருந்து உலகபோகங்கள் அனைத்தும் அனுபவிக்கும் வாய்ப்பு பெற்றவர் கூறுகின்றார்.

பித்தன் என்றெனை உலகவர் பகர்வதோர் காரணம்
இது கேளீர்.
ஒத்துச்சென்று தன்திருஅருள் கூடும் உபாயம்
அது அறியாமே

தேவசித்தத்தை (Will of god) இயற்கையோடியைந்த வாழ்வால் உணர்ந்து ஒத்துச் செல்லும் போது வாழ்வு தங்குதடையின்றி நீரோட்டமாகச் செல்கிறது. தாளம் தப்பும் போது, ஒத்திசைமாறும் போது முரண்பாடுகள் தோன்றுகின்றன. முரண்படு நிலையில் உரோஞ்சும் நிலையில் பௌதீக உடலி லும் சரி, உளவியல் நிலையிலும் சரி புண்கள், ஊனங்கள், கொப்புளங்கள் எழுகின்றன.

உளவியலாளர் இயல்பூக்கங்கள் மனிதனுக்கும், விலங்குகளுக்கும் பொது என்கின்றனர். அச்சம் என்ற இயல்பூக்கம் இருப்பதால், தன் மீது முட்ட வரும் ஆபத்தான முரண்நிலையில் மனிதன் தப்புவதற்கு அது பயன்படுகிறது. அதேபோல், கோபம் அவன் பகைவனை மிரட்டப்பயன்படுகிறது. காமம் அவன் தன் இனப்பெருக்கத்துக்கு இயற்கையால் அளிக்கப்பட்ட, சிருட்டியின் நோக்கத்தை, இயற்கையின் தொடர்ச்சியைப் பேண உதவும் இயல்பூக்கம் இயற்கையோடு இயைந்த வாழ்வில் விலங்குகள் கூடஇவ்வுணர்ச்சிகளை தேவை அறிந்து அளவறிந்து வெளிப்படுத்துகின்றன. இயற்கையின் ஒழுங்கு பிசகாமல் உணர்ச்சிகளைப் பயன்படுத்துகின்றன. அதனால் நலமுடன் வாழ்கின்றன. மனிதன் தனக்குள்ள சுதந்திரசித்தத்தை (Free will) பயன் படுத்த இயற்கை நியதிக்குமாறாக, அளவு மீறிய உணர்ச்சிகளை வெளிப்படுத்துகின்றான். அதனால் துன்பமும் துயரமும் நிரந்தர புண்ணைவிடுகின்றன. மனவடு, உடல்வடு, உளநோய், உடல்நோய் என இருமை நிலை அவனை இருபக்கமும் இழுக்கிறது.

இந்த முரணுறுநிலையைச் சமன்படுத்த அறிஞர்கள், புலவர்கள், அறவியலார், சமயவாதிகள் என்றின்ன வகையினர் வழிவகைகளை வகுத்துள் ளனர். அவற்றில் நம்பிக்கை வைத்து, தம்மனம் போனபடிவாழாமல், ஒழுங்கு நெறியில் வாழ்ந்து, விலங்குநிலை வாழ்க்கையை, பண்பான வாழ்க்கையாக, தனக்கும், பிறர்க்கும் பயனுள்ள வாழ்க்கையாக மாற்றுகின்றனர். நாகரிகம், பண்பாடு, கனவானின் இயல்பு என்றெல்லாம் பேசப்படும் மனித விழுமியங்கள் அவனை உயர்த்துகின்றன. சீன சிந்தனையில் யின் - யாங் என்ற இருமையாக வாழ்வு அமைகிறது. ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம், ஒன்றுமிகின், ஒன்று ஒளிக்கும்".

"இருமை வகைதெரிந்து, ஈண்டு அறம் பூண்டோர்
பெருமை பிறங்கிற்று உலகு"

"இருளினின்றும் ஒளிக்கு, அசத்தினின்றும் சத்துக்கு, மரணத்தினின்றுந் மரணமற்ற (அமிர்த) வாழ்வுக்கும் என்னை இட்டுச் செல்க" என்பது உபநிடத் பிரார்த்தனை.

இயல்புக்களை மட்டுப்படுத்தி அவை இயற்கையின் என்ன நோக்கத்துக்காகத் தரப்பட்டதோ அதற்கு மட்டும் கணக்காக உபயோகித்தால் அவை மனிதனை உயர்த்தும் நவீன உயவியலாளர் உளவியற் பகுப்பாய்வு கொண்டு உள்ளே நிகழும் முரண்பாடுகளின் மூல காரணங்களைக் கண்டறிந்து அவற்றை நிமிர்த்தி, கோணல்களைக் களைந்து மனிதன் தளப்பம் இல்லாத வாழ்வு நடத்தவழி செய்கின்றார்கள் பணம், அதிகாரம், ஆட்பலம் என்ன இருந்தாலும் உள்முரண்பாடுகளை வெற்றிகரமாகச் சமாளிக்க இயலாவிட்டால், தனி மனித வாழ்வும், அதனுடன் தொடர்புடைய சமூக. அரசியல் நிகழ்வுகளும் தீராமுரண்பாட்டுக்கு இலக்காகும் வாழ்வை, அழிவை நோக்கிப்பிடர் பிடித்துத்தள்ளும்.

உதாரணம் பிரஞ்சுப்புரட்சிகக்குச் சற்றுமுன்னர் 16ம் லூயிமன்னனின் காமக் கிழத்திக்கும், அவனுக்குப்பின் சிம்மாசனம் ஏறவேண்டிய அரசகுமாரனுடைய ஆஸ்திரிய நாட்டு இளவரசிக்குமிடையில் இருந்த கர்வம் பொறாமை காரணமாக ஒருபோரே ஏற்படும் நிலை உண்டாயிற்று, இரு தொல்பெரும் குடும்பங்கள் மட்டுமன்றி இரு நாடுகளுமே அழிவின் விளிம்பிற்குச் சென்றன என்பர். 1940 அளவில் ஜின்னா இந்திய அரசியல் வாழ்வுக்கு முழுக்குப்போட்டு லண்டனில் குடியேற்றத்தீர்மானித்த போது "ஜின்னாவின் அரசியல் வாழ்வு அஸ்தமித்து விட்டது" என்று நாவைக்கட்டுப்படுத்தாமல் ஜவஹர்லால் நேரு பேசியதால், ஜின்னா பயணத்தை நிறுத்தி பாகிஸ்தான் பெற்றேவிட்டார்.

"யாகாவாராகிலும் நாகாக்க காவாச்சால்
சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு"
(குறள்)

இப்படியாகத்தனிமனித உடல், உயிர் ஊனங்களுக்குக் காரணங்களை முழுமையாக நோக்கி பழைய ஆயுர்வேத நூல்கள் சிறந்தகாரண காரியத்தொடர்புகளைக் காட்டி, நோயின் மாற்றுக்கு வழி செய்துள்ளன.

பகுப்பாய்வுப் போக்கு நவீன ஐரோப்பிய சிந்தனையில் முக்கிய இடம்பெற்றதால் எதனையும் முழுமையாகப் பார்க்கும் பாங்கு அற்றுவிட்டது. மனிதனை விலங்குப் பிராணி, சமூகப்பிராணி, பொருளாதாரப் பிராணி, சிந்திக்கும் பிராணி என்றெல்லாம் வகைப்படுத்திப்பார்க்கும் இக்கால நிபுணத்துவப்போக்கு, அவனை முழுமையாக நோக்கி, முழு நோய்க்கு, முழுத்தீர்வுகாணும் திறனை இழக்கச் செய்துவிட்டது. அதற்கும் மேல் நுண்ணிய தொழில் நுட்பவியல் மருத்துவத்துறையில் புகுந்து, குருதியை கணணிப்பகுப்பாய்வு செய்வதும், சிறுநீரகத்தின் கருமங்களை இயந்திரங்களைக் கொண்டு செய் வதும், சத்திரசிகிச்சை அனைத்துக்கும் சிக்கார்ந்த, கோடிக் கணக்கான செலவுள்ள யந்திரங்களை நம்பியிருப்பதும், வைத்தியனது முழுமை இருதய அறுவைச்சிகிச்கைக்கு, அல்லது சிறுநீரகமாற்றுக்கு மூன்றரை லட்சம் வேண்டுமென்று விளம்பரம் செய்வதும் இன்று வழக்கமாகிவிட்டது.

அடுத்த இதழில் தொடரும்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாத்மா காந்தியடிகளின் 138 ஆவது ஜயந்தி தினம்

1869ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2ஆம் திகதி உலக வரலாற்றில் முக்கியமான ஒரு நாளாகும். இந்தியாவின் தேசபிதா 'மகாத்மா' என்று போற்றப்படும் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி இத்தினத்திலே குஜராத்மாநிலம் போர்ப்பந்தரில் பிறந்தார். அவர் இலண்டனில் பட்டம் பெற்றுத் தென்னாபிரிக்காவில் வழக்கறிஞராகப் பணியாற்றினார். முதல் வகுப்பில் பயணம் செய்வதற்கான சீட்டு கையிலிருந்தும் நிறவெறி காரணமாக ஒரு ஆங்கிலேயன் அவரை முதல் வகுப்புப் பெட்டியிலிருந்து கீழே தள்ளியதும் அவரது எதிர்காலப் போராட்டங்களுக்குத் தென்னாபிரிக்காவில் அடிக்கல் நாட்டப்பட்டது. அகிம்சை சத்தியாகிரகம் என்ற இரண்டு ஆயுதங்களைக் கையிலெடுத்துக் கொண்டு சர்வவல்லமை பெற்ற ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்து மாபெரும் போராட்டங்களை நடத்தினார். ஆனால் எந்த அரசுப்பதவியையும் அவர் வகித்ததில்லை. தனது வாழ்க்கை அனுபவங்களை சத்தியசோதனை என்ற நூலாக எழுதினார். 1948ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆந் திகதி ஒரு பிரார்த்தனைக் கூட்டத்தில் 'கோட்சே' என்பவரால் சுட்டுக்கொல்லப்பட்டார். அவரின் புகழுடல் மறைந்தாலும் அவர் தம் கருத்துக்களும் பணியும் என்றும் வாழ்ந்துகொண்டிருக்கும்.

-எம்.எஸ்.சத்தியகீர்த்தி-

## உயிருள்ள நினைவுச் சின்னம்

திருவள்ளுவர் எச்சம் என்று கூறியது ஒருவன் பின் எச்சமாய் நின்று அவரின் பெருமையை நினைவுபடுத்துவதையேயாம். நினைவுச்சினங்கள் பலவகைப்படும். அச்சாலைகள் பொதுக்கிணறு கள் சுமைதாங்கிகள் வித்தியாசாலைகள் திருக் கோயில்கள் குளங்கள் நந்தவனங்கள் முதலி யன நினைவுச்சின்னங்களாகும். இவற்றுள் நந்த வனங்கள் அல்லது மரத்தோப்புக்கள் உயிருள்ள நினைவுச் சின்னங்கள் எனத்தக்கவை.

தனியொருவர் நாட்டிய தனியொருமரம் சில சமயம் பெரிய நினைவுச்சின்னமாய் நீண்ட காலம் நிலைத்து நிற்கிறது.

காடு கெடுத்து நாடாக்குதல் தேவையைப் பொறுத்தது. ஆயினும் காடு உண்டாக்கி பயன் பெறுதல் தலையாய முயற்சி. காடு படு திரவியம் கிடைப்பதோடு காட்டில் பெய்யும் மழை நிலத்தி லேயே சுவறி நீர் வசதியை உண்டாக்கிறது. காடுகள் மண்ணரிப்பைத் தடுக்குகின்றன.

காடுகள் இயற்கை மூலவளங்களில் ஒன்று. காடுகள் பல வகைப்படும். காடுகளில் உண்டாகும் மரங்களும் பல வகைப்படும். வீடு கட்டுவதற்கு மரம் உதவும். காடுகள் விறக்கான மரம் தரும் காடுகள், மழையைப் பெய்விக்கும் காடுகள், மரங்கள் ஓங்கிய காடுகள், மருந்துக்கு வேண்டிய மூலிகையைத் தரும் காடுகள், மண் ணரிப்பைத்தடுக்கும் காடுகள் என பலவிதமான காடுளை வகுக்கலாம். இக்காலத்தில் எம் முன்னையோர் இடுகாடுகாடுகளில் இறந்தவர் நினைவாக மரங்களையே நாட்டினர். வெளிநாட்டு நாகரீகம் இங்கே பரவிய பின் இறந்தவர் நினைவாக கல்லறைகள் கட்டும் வழக்க முண்டாயிற்று.

ஆனால் பாலைவனமாய் இருந்த ஸ்ரேல் நாட்டடில் இறந்தவர் பொருட்டு மரங்களை நாட் டும் வழக்கமுண்டான பின் அந்த நாடு சோலை வனமாக மாறியுள்ளது. செல்வம் கொழிக்கிறது. உசிய நாட்டில் உருவாகும் புதிய நரகங்களைச் சூழ பெரிய மலைச்சோலைகள் உருவாகின்றன. பசுமையற்ற கொங்கிறிற் வீடுகளில் வாழ்கின்ற மக்கள் குளிர்ச்சியை அனுபவிக்கின்றதற்கு பசுஞ்சோலைகளை நாடுகின்றனர். குளிரான நாட்டிலேயே மரச்சோலை தேவையாகின்றபோது வெறும் வெப்ப வலயத்தில் வாழும் நாம் நம் சூழலை குளிர்ச்சியாக நினைக்கின்றோமில்லை.

காடு கெடுத்தலில் தீவிரமாக ஈடுபடுகின்ற நாம் அதேவேளை விறகு தட்டுப்பாட்டினால் வெகுவாக வருந்துகின்றோம். விரைவாக வளர்ந்து விறகு தரும் மரங்களை வரிசையாக நாட்டுவது அவசியமாகின்றது. புரதான பெருமை வாய்ந்த பாரசீகம் என்னும் ஈரான் நாட்டில் வனாந்தரப்பகுதி பரவி வருகின்றது. பிலிப்பின்ஸ் நாட்டினரைப் போல் ஆங்கிலேயரும் மரம் நாட்டும்பணியில் தீவிரமாக ஈடுபட்டு பலகோடி மரங்களை உண்டாக்கத் திட்டமிட்டுள்ளனர். நாங்களும் பின்பற்றுவோமாக.!

நன்றி :
மில்க்வைற் செய்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழையன கழிகின்றன...

## விமலாதக்காரின் சிந்தனைத் துளிகள்

1. அமெரிக்கா தன் பணவலு, படைவலு என்பவை தந்த அகங்காரத்துக்கு விலைகொடுத்தே தீரவேண்டும்.
2. ஐ.நா. அமெரிக்காவின் நிதியுதவிக்குக் கையேந்தி நிற்காமல் விடுதலை பெறவழிவகுக்கவேண்டும், அல்லது தனது அற அதிகாரத்தை என்றென்றும் இழந்து விடவேண்டும்.
3. ஈராக்கின் மீது அமெரிக்கா போர்தொடுத்தற்கு உலகளாவிய எதிர்ப்பு தோன்றியிருப்பது, சர்வதேச அரசியலில் ஒரு புதுயுகம் பிறந்திருக்கிறது என்பதைக்குறிக்கிறது.
4. பயங்கரவாதம் என்ற குறுமதம் பொருளாதாரச் சுரண்டல், உளவியற்சுரண்டல் என்ற ஈவிரக்கமற்ற இராட்சத குணத்தை சமயத்தின் போரால் வளர்ப்பதின் பக்க விளைவே.
5. அடுத்த பத்து ஆண்டுகளும் அரசு என்ற நிறுவனத்தின் பயங்கரவாதத்திற்கும், போதைவஸ்துக்கும் அடிமையானோர், கற்றோரும் கல்லாதோருமாகிய. வேலையில்லாத் திண்டாட்டத்தில் வருந்துவோரின் குழுக்களுக்கும் இடையே உலகளாவிய ரீதியில் முரணுறு நிலை இருக்கும்.
6. சமூக வாழ்வின் எல்லாத்துறைகளிலும் அறநெறி பிழைத்துவிட்டமை உச்சக்கட்டத்தை அடையும் போது பண்பாட்டு மீளமைப்புக்குரிய வரலாற்றுத் தேவை ஏற்படுகின்றது.
7. அற மீளமைப்புக்கருத்து ஒவ்வொரு நாட்டிலும் பொறுப்புவாய்ந்த குடிமக்கள் கல்வித்துறையினர், எழுத்தாளர், புலவர், குருமார், கலைஞர் ஆகியோரின் உள்ளத்தில் பிறக்கின்றது. அது அவர்களது பேச்சிலும் எழுத்திலும் பிரதிபலிக்கின்றது.
8. புரட்சியின் வித்துக்கள் உளவி வானத்தின் வெற்றிடத்தில் விதைக்கப்படுகின்றன. அவை மண்ணில் இறங்கி ஒவ்வோரு உள்ளத்திலும் மின்சத்தி பாய்ச்சுகின்றன.
9. சகோதரதத்துவம், சுதந்திரம், சமத்துவம் என்ற தாரகமந்திரங்கள் மூலம் உலகை உலுக்கிய பிரஞ்சுப்புரட்சி இவ்விதமாக பிறந்தது. வறுமை பட்டினிக்கு எதிராக உலகின் உழைப்போருக்காகக் குரல் கொடுத்த ருஷியப் புரட்சி இவ்வாறே தோன்றியது. முதல் இந்திய சுதந்திரப்போர் 1815ல் இப்படியே எழுந்தது.
10. 21ம் நூற்றாண்டு முரண்பட்டு முட்டி மோதும் நாகரீகங்களின் மறைவையும், ஒத்திசைவுடன் ஒலிக்கும் உலக நாகரீகம் ஒன்றின் மலர்ச்சியையும் காணப் போகின்றது. பௌதிகவியலும், பௌததிக அதீதம் ஒன்றிணையும், அணுசக்தி தொழில்நுட்பமும், புராதன பண்பும் ஒன்றிணைந்து சமாதானப் பண்பாடு ஒன்று தோன்றுவதற்கு வழிகாட்டும்.
11. இது ஒரு மயிர்க்கூச்செறியும் அற்புதக் காட்சி, கனவுலக நோக்கு. எண்பது ஆண்டுகள் இன்றுள்ள ஆனால், அழிந்துகொண்டிருக்கின்ற நாகரிகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தவரின் இலட்சிய நோக்கு. இன்று வயோதிபராயிருப்போரின் புதிய இனம், புதிய பண்பாட்டுடன் புது வாழ்க்கை பெறுவதையும், நட்பு, கூட்டுறவு, உடன் ஒத்துவாழ்தல் என்ற புதிய பரிமாணங்களுடன் விகசிப்பதையும் காண ஆசைப்படும் போக்கு.

நூல் அறிமுகம்

## மோகனதாஸ் காந்தி முக்கிய எழுத்துக்கள்

மகாத்மாகாந்தி ஒரு முறை எழுதினார் - "என் உடலுடன் என் எழுத்துக்களும் எரிக்கப்படல் வேண்டும்... நான் செய்தவை நிலைத்திருக்கும். நான் பேசியவையும் எழுதியவையும் அல்ல". ஆனால் அவர் புத்திமதியை இந்திய அரசாங்கம் புறக்கணித்துவிட்டு இருபது ஆண்டுகள் அவர் பேசியவை, கடிதங்கள், எழுதிய ஒவ்வொரு சொல்லையும் தேடி எடுத்துப் பதிப்பித்தது.

1984ல் இந்திய அரசு மகாத்மா காந்தியின் தொகுப்பு நூல்கள் என்ற வரிசையைப் பூர்த்தி செய்தது. 95 பாகங்களாக 43 ஆயிரம் பக்கங்கள் அச்சடிக்கப்பட்டன. ஜோன் டியர் என்ற அறிஞர் அந்தத் 95 பகுதிகளையும் படித்தார். வேறு பற்பலதொகுப்புகளையும் வாழ்க்கை வரலாறுகளையும் வாசித்தார்.

காந்தி ஒரு செயல்வீரர். எனினும் தினமும் பல மணி நேரம் எழுதிவந்தார். ஆனால், அவை அவசரத்தில் கடமை நோக்கில் எழுதப்பட்டவை. பிறரை ஆன்மீகப் பாதையில் செலுத்தவும் அஹிம்சை வழியில் அரசியற் பணிகளை விரைவுபடுத்தவுமே அவர் எழுதிக் குவித்தார். ஆகவே, அவரது எழுத்துக்கள் குழப்பம் நிறைந்த வாழ்க்கை என்ற சூழலில் மலர்ந்தவை என்பதை நாம் மனதில் இருத்தல் வேண்டும்.

இந்நூலின் ஆசிரியர் காந்திஜின் ஆக்கங்களை சில முக்கியமான தலைப்புகளில் வகைப்படுத்தியுள்ளார். முதலில் அவரது சுயசரிதக்குறிப்புகள் இடம்பெறுகின்றன. தொடர்ந்து இறைவனைத்தேடல், உண்மையைத் தொடர்தல், அஹிம்சையை சாதனையில் கடைப்பிடித்தல், பிரார்த்தனை, உண்ணாவிரதம் என்ற மனப்பயிற்சி, அணு ஆயுதங்களை அகற்றவேண்டிய அவசரத்தேவை, இடைவிடாது (அநீதியை) எதிர்த்து நிற்றல் என்ற பகுதிகளில் எவ்வளவு சிறந்தவையும் அவரது (இந்த ஊக்கங்களுக்கு திறவுகோல் போன்றவையுமான பேச்சுகள், கடிதங்கள் மாதிரி வகைகள் என்று பல இனக்கருத்துக்கள் இரத்தினச் சுருக்கமாக இடம்பெற்றுள்ளன.

இவை இன்று வெறும் உலகியல் நெறியைவிட்டு ஆன்மீகப்பாதையில் செல்லவிரும்புவோருக்கு வழிகாட்டிய ஒரு மாமனிதர் வாழ்க்கையையும் செய்தியையும் முன்வைக்கின்றன. அவரது உள்ளத்தைத் திறந்து ஆத்மாவைக் காட்டுகின்றன. அருண்காந்தி இதனைப் பாராட்டி அஹிம்சைக்குரிய காந்தியின் சிறந்த அணுகுமுறையை விளக்குவதற்கு இக்காலத்துக்கு அவசியமான கைநூல் - சமாதானம் நிலவ அரும்பாடுபடுவோர் கட்டாயம் படிக்கவேண்டியது எனக்குறிப்பிடுகிறார்.

காந்தீயம் செத்துவிட்டது என்று முற்போக்குப்பேசும் நம்மேதாவிகள், மேனாட்டார் - காந்தியை எப்படி படித்து ஆய்வு செய்து மனத்தில் இருத்தியிருக்கிறார்கள் என்பதைக் கவனிப்பது நல்லது.

நன்றி :
**MLB BD News Letter**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலி



## கலாநிதி
## க.சிவராமலிங்கம்பிள்ளை

**16.09.1925** **25.08.2005**

கலாநிதி க.சிவராமலிங்கம் அவர்கள் தனது 80 ஆவது வயதில் காலமாகி விட்டார். இவர் அகில இலங்கை காந்திசேவா சங்கத்தி உபதலைவர்களில் ஒருவரும் தலைசிறந்த கல்விமானும் ஆவார். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஆசிரியராக பணியாற்றிய காலத் தில் நூற்றுக்கணக்கான நன் மாணாக்கர்களை உருவாக்கியுள்ளார்.

அகில இலங்கை காந்திசேவா சங்கம் மீள புனரமைக்கப்பட்டபோது அதன் உப தலைவர்களில் ஒருவராகப் பொறுப்பேற்றுச் செயற்பட்டதுடன் காந்தீயம் பத்திரிகை வெளியீட்டிலும் பங்குபற்றயிருக்கின்றார். காந்தீயம் (இதழ் 19) முதலாவது இதழில் வெளியான ஆன்ம விசாரம் நூல் பற்றிய அறிமுகக் குறிப்பினையும் அவரே எழுதியுள்ளார்.

தன் வாழ்நாளின் இறுதிநேரம் வரை உயர்கல்வி மாணவரது ஆராய்ச்சிக்கு தலை சிறந்த வழிகாட்டியாகவும் சமுகத்தின் ஏனைய பிரிவினருக்கு சிறந்த ஆலோசகராகவும் இருந் துள்ளார். அவரது மறைவு குறித்து ஆழ்ந்த துயரடைந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் காந்தீயம் தனது ஆழ்ந்த அனுதாபத்தைதெரிவித்துக் கொள்கின்றது. அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றது.

# விதுர நீதி

விதுரர் பாண்டவர் கௌரவரின் சிற்றப்பன். வியாசரின் பூரண அனுக்கிரகம் பெற்றவர். திரிகால நிகழ்ச்சிகளை உணர்ந்தவர். நல்லவர். அவர் கூறிய சுகந்தரும் வழிகள் வருமாறு:-

குருவை தினந்தோறும் வணங்கிவருவோனும் என்றென்றும் பெரியவர்களை நெருங்கி வழிபாடு செய்பவனும் ஆனமனிதனுக்கு தானம் முதலியவைகளால் உண்டாகும் ஆயுள், பராக்கிரமத்தால் உண்டாகும் புகழ், பலம் என்னும் நான்கும் நன்றாக வளர்ச்சியடைகின்றன.

அறிவில் உயர்ந்தவர்களைச் சேர்ந்தவர் கல்விமான், தர்ம சீலன், காட்சிக்கு இனிமையானவன், நண்பனுடன் கூடியவன், இனிமையான நல்வாக்கு உடையவன் இப்படிப்பட்ட நண்பனை காக்கவேண்டும்.

எண்ணத்தோடு எண்ணமும், ரகசியத்தோடு ரகசியமும், அறிவோடு அறிவும், எந்த இரண்டு பேர்களுக்குள் ஒத்துப்போகின்றதோ அவர்களுக்குள் இருக்கும் நட்பானது ஒரு நாளும் கெட்டுப்போகாது.

கெட்ட புத்தியும் கல்வி அறிவு இல்லாதவனும் ஆனவனை அறிவாளியானவன் புல்லால் மூடப்பட்ட கிணற்றைப்போல கருதி விலக்கவேண்டும். ஏனென்றால் அப்படிப்பட்டவனிடம் நட்பு விரைவில் அழிந்து போய்விடும்.

கர்வம் கொண்டவர்கள், மூடர்கள், கோபமுடையவர்கள் ஆலோசிக்காமல் செய்பவர்கள் தர்மத்தை விட்டவர்கள் முதலியவர்களிடம் கல்வி அறிவுடையவன் நட்பு வைத்திருக்கக்கூடாது.

அநியாயத்தால் இழந்தபொருளை மிகுந்த மனஉறுதியோடு நல்லவிதமாக, நியாயமாக, மறுபடியும் பெறவிரும்பும் மனிதனே உத்தமனாவான்.

மனிதன் தன்காரியங்களினாலும் மனத்தினாலும் வாக்கினாலும் எதைஅடிக்கடி பிடித்துக்கொள்கின்றானோ அதுதான் அவனை கவர்கின்றது. ஆகவே நல்லதையே செய்யவேண்டும்.

விடாமுயற்சியானது செல்வத்திற்கும் லாபத்திற்கும் நன்மைக்கும் காரணமாக அமைகின்றது. விடா முயற்சி உள்ளவன் மேன்மையடைவதோடு சுகத்தை அனுபவிக்கின்றான்.

கோபப்படாமல் இருந்து கோபத்தை வெல்லவேண்டும். நம்முடைய நல்லொழுக்கத்தால் தீயவனை வெல்லவேண்டும். கருமியை தானத்தல் வெல்லவேண்டும். பொய்யைச் சத்தியத்தால் வெல்லவேண்டும்.

சாதுக்களிடமும் பெண்களிடமும் பசுக்களிடமும் தங்கள் சூரத்தனத்தைக் காண்பிப்பவர்கள் உலகில் இருந்து பழுத்த பழம் கீழே விழுவது போல் விழுவார்கள். அறிவாளிகள் சூதாடமாட்டார்கள்

**"காந்தீயம்"** இப்பத்திரிகை அகில இலங்கை காந்தி சேவா சங்கத்திற்காக இல:171 ,முதலாம் குறுக்குத்தெரு என்னும் முகவரியில் வசிக்கும் சங்கத்தலைவர் திரு.சோ.கா.தம்பிப்பிள்ளை அவர்களால் 2005 ஒக்டோபர் 2ஆம் திகதி பரமேஸ்வராசந்தி, அம்பாள் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. இதழாசிரியர் : தி.உதயசூரியன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org